Arimaa Nokku

# அரிமா நோக்கு

13:1 ஏப்பிரல் 2019

₹ 30

ISSN 2320-4842

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

Sender : Arimaa nokku, anbaham, # 1, 15th Cross Street, Kurinji Nagar, Perungudi, Chennai 600 096.

ISSN 2320-4842

முடிவாகச் சொன்னால் நடந்து முடிந்த தேர்தல்கள் யாவுமே யாருக்கான அரசை நிறுவின? யாருக்கான அரசியலைக் கடைப்பிடித்தன?

திருவிழாக் கூட்டத்தில் காணாமற்போன குழந்தைகளாக வாக்களித்த .மக்களும் அவர்களுடைய ஆசைகளும் கனவுகளும் இன்னும் எவ்வளவு காலம் நம்பிக்கையோடு வாக்குச் சாவடிக்குப் போகும்?

◆

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*
வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*
கா. செல்லப்பன்
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

வாழ்நாள் கட்டணம் ரூ. 3000/- US $ 150

புரவலர் கட்டணம் ரூ. 5000/- US $ 200

பெரும்புரவலர் கட்டணம் ரூ. 10, 000/- US $ 500

நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) ரூ. 15,000/- US $ 700

### விளம்பரக் கட்டணம்

பின்னட்டை (பல வண்ணங்கள்) ரூ. 15, 000/-

உள்ளட்டை (பல வண்ணங்கள்) ரூ. 10, 000/-

முழுப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 3, 000/-

அரைப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 1, 500/-

கட்டணம் செலுத்த:

ISSN 2320-4842

அரிமா நோக்கு
13 : 1 ஏப்பிரல் 2019

ரூபி கௌர்
- வ. ஜெயதேவன் 03
அன்னை
- ச.சு.இராமர் இளங்கோ 04
ஜி.யூ. போப்பின் தமிழ் இலக்கணம்...நன்னூலின் பயன்பாடு
- இல. சுந்தரம் 08
பாரம்பரிய மொழிப் பயன்பாட்டாளர்களின் பன்மொழிப் பயன்பாட்டு நடத்தைகள்
- திலகவதி சித்திரபுத்திரன் & சீதா லட்சுமி 13
இன்குலாப் கவிதைகளில் நாட்டுப்புறக் கூறுகள்
- மு. அருணாசலம் 21
பிரிட்டிஷ் இந்தியக் கால்நடை மருத்துவக் கல்வி நிலையங்கள்
- பா. மதுகேஸ்வரன் 27
உடலசைவு மொழி
- விஜயலெக்ஷ்மி 31
புதிய நோக்கில் திருக்குறள் உரை
- மருதூரார் 34
இல்வாழ்க்கைக்குத் திருக்குறள் அளித்துள்ள முதன்மை
- நா. சுப்பிரமணியன் 37
தொல்காப்பியரின் செவ்விலக்கிய அங்கதக் கோட்பாடு
-மணிவண்ணன் முருகேசன் 42
பரிபாடலில் பண்கள்
- இரா. பிரசன்னகுமாரி 45
புலம்பெயர் தமிழர்களின் பண்பாட்டுக் கல்வியில் திருக்குறளுக்கு அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம்
-கௌசல்யா சுப்பிரமணியன் 48
பண்பாட்டு நெறிகள்: சங்க இலக்கியம், திருக்குறள்
- வெ. இராம்ராஜ் 52
The Crisis of Civilization
- Rabindranath Tagore 58

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## திருவிழாவில் காணாமற்போன குழந்தை

அண்மையில் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் இந்தியாவின் முன்னைத் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு கிருட்டிணமூர்த்தி ஒரு கருத்தை வலியுறுத்திப் பேசியுள்ளார்:

> ***உலகிலுள்ள 140 நாடுகளில் 120 நாடுகளாவது தம்மை மக்களாட்சிய நாடுகள் என்று கூறிக்கொள்கின்றன. ஆனால் மக்களாட்சியத்தின் கூறுகளை உற்று நோக்கும் போது அந்த நாடுகளில் மக்களாட்சியம் இருக்காது. நாம் முதலில் நம் நாட்டில் மக்களாட்சியத்தின் தரத்தை உயர்த்த வேண்டும்.***

மேற்காட்டியுள்ள கருத்தின் அடிப்படையில் பார்த்தால் மக்களாட்சியம் மன்னர்மரபு ஏற்பு மக்களாட்சியம், இராணுவத்தலைமை மக்களாட்சியம், ஆதிக்கமதவழி மக்களாட்சியம், அதிகாரவர்க்க மக்களாட்சியம், பெருந்தொழில் நிறுவனங்கள் கட்டியமைக்கும் மக்களாட்சியம் என்று உண்மை மக்களாட்சியம் தவிர்த்து மற்றையவழி மக்களாட்சியமே பல்கியிருப்பது புலப்படும்.

நம் நாட்டின் மக்களாட்சியத்தின் தரத்தை முதலில் நாம் உயர்த்த வேண்டும் என்ற முன்னைத் தலைமைத் தேர்தல் ஆணையர் நம் மக்களாட்சியம் தரமற்றுத் தாழ்ந்து கிடப்பதையே சுட்டிக்காட்டுவதாக நாம் கருதவேண்டும். முன் சொன்ன போலி மக்களாட்சியங்களில் சிலவற்றின் முகவரி மறைப்பில் ஒருவகை வல்லாதிக்கமே ஒவ்வொரு தேர்தல் முடிவின் பின்னும் நிறுவப்படுகிறது.

தேர்தலுக்குமுன் ஓர் உறுதிமொழி கொடுத்தல், வெற்றி பெற்ற பின் அவ்வுறுதி மொழியைக் குப்பைக்கூடையில் போட்டுவிட்டு மக்கள் வேண்டாம் என்று எதிர்த்தவற்றைத் திட்டமிட்டு நிறைவேற்ற முற்படுதல்; பன்முகத்தன்மை உள்ள நாட்டில் ஒரே மதம், ஒரே மொழி, ஒரேவகை உனவு, ஒரேவகைத் தூக்கம், ஒரேவகைக் கனவு என்றெல்லாம் உண்மை மக்களாட்சியத்தின் ஈரலை மென்று தின்ன வெறியெடுத்து வாக்களித்த மக்களுக்கு எதிராகச் செயல்படுவது - எல்லாமே தரம் தாழ்ந்த, அல்லது தரமே இல்லாத மக்களாட்சியத்தின் அடையாளங்களே.

⇨